IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.65/2020
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.35 PM.

<u>பி.வா.சா.1 சாட்சி மாயகுரு த.பெ.குருசாமி</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 28.01.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ. 1 ஆவணத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் படிக்கவில்லை. வாதி குணசேகரன் தற்போது எனது வீட்டின் மாடியில் குடியிருந்து வருகிறார் என்றால் குணசேகரன் என்று எனக்கு யாரையும் தெரியாது. 27.02.2006 ம் தேதி கிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் எழுதிகொடுத்தேனா என்றால் தெரியாது. வா.சா.ஆ. 7 ஆவணத்தில் உள்ள கு.மாயகுரு என்பது என் கையெழுத்துதான் என்றால் சரிதான். யார் யார் எழுதிகொடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

2. 25.01.2006ம் தேதி வா.சா.ஆ. 6 ஆவணமானது ராஜா என்பவருக்கு நான் எழுதிகொடுத்த பத்திரமா என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ 6 மற்றும் 7 ஆவணத்தில் குணசேகரன் மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் எந்த வருடத்தில் இருந்து பழங்கானத்தத்தில் இருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததில் இருந்து அதே முகவரியில்தான் வசித்து வருகிறேன். 11.03.1987 ல் நானும் எனது சகோதரர் சுந்தராஜன்

என்பவரும் வேல்முருகன் என்பவருக்கு எங்களுக்கு பாத்தியமான சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தோமா என்றால் ஞாபகம் இல்லை.

3. மாடக்குளம் கிராமம் புஞ்சை ரீ சர்வே எண். 355/2 ல் கட்டுப்பட்ட சொத்து எனக்கு பாத்தியமானதா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் வாதிகளை எனது மகன்களாக காண்பித்து கிரையம் செய்து கொடுத்ததால் தற்போது தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. குணசேகரன் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. லெட்சுமியம்மாள் யார் என்றால் தெரியாது.

4. லெட்சுமியம்மாள் என்பவர் எனது மனைவி என்றும் வாதிகள் வாதிகளின் தாயார் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 10 ஆவணமானது குடும்ப அட்டையில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் லெட்சுமி, குணசேகரன், முத்துப்பாண்டி ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது என்னவென்று தெரியாது. இந்த வழக்கில் கட்டுப்பட்ட சொத்து எனக்கு பூர்வீக பாத்தியமானது என்றால் சரிதான்.

5. வாதிகள் எனது மகன் என்ற அடிப்படையில் பூர்வீக சொத்தில் அவர்களுக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் லெட்சுமியம்மாளுக்கு நான் அடைக்கலம் கொடுத்து பாதுகாத்து வந்தேன் என்று நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரத்தை எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். தற்போது லெட்சுமியம்மாள் யார் என்றால் எனக்கு தெரியாது.

6. கடந்த 30.10.2019ம் தேதி அன்று நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரம் வாதிகளின் பாத்தியத்தை மறைத்து சொத்து முழுவதும் கிரையம் செய்து கொடுத்ததால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவம் வாதிகளின் பாத்தியத்தில் இருந்து வந்ததால் சொத்தின் சுவாதினத்தை கிரைய பத்திரத்தில் சொல்லியுள்ளபடி 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. மேற்படி கிரைய பத்திரம் வாதிகளுடைய பங்கு உரிமையை அபகரிக்கவேண்டும் என்று என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வாதிகளின் உரிமையை மறைத்து நான் கிரைய பத்திரம் பதிந்து கொடுத்திருப்பதால் வாதி கோரியுள்ள படி வாதிகளுக்கு பரிகாரம் கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் உள்ள சொத்து 2ம் பிரதிவாதி வசம் சுவாதினம் எந்த காலத்திலும் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அவருக்கு எந்தவித உரிமையும் கிடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 1, 2 வாதிகள் எனது மகன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.00 PM

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.28 10:32:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.